'அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்' Karkuzhali Sreedhar --

பன்முகத் திறமைகள் கொண்ட திரு. இந்திரன் அவர்களின் புத்தகம் கைக்கு வந்த நாளில் இருந்து அதில் இருந்த கவிதை, கதை, கட்டுரை, நாடகம் இவை முழுவதையும் படிக்கப் படிக்க வியப்பில் ஆழ்ந்தேன். கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் அவரால் மொழியாக்கம் செய்யப்பட்ட தொகுதி. அந்தக் காலகட்டத்தில் பெரும்பாலும் அமெரிக்கா, இங்கிலாந்து, சோவியத் ரஷிய நாடுகளின் புத்தகங்கள்தான் இங்கே கிடைக்கும். ஆப்பிரிக்க அமெரிக்க இலக்கியம்கூட இன்றுபோல பரவலாகியிருக்குமா என்பது சந்தேகம். தகவல் தொழில்நுட்பம் என்றால் என்னவென்றே தெரியாத அந்தக் காலத்தில் இத்தனை ஆப்பிரிக்க இலக்கியங்களையும் எப்படித் தேடிப் படித்தார் என்பது வியப்பூட்டுகிறது. ஒரு கதையை மொழியாக்கம் செய்ய வேண்டும் என்றாலே குறைந்தது பத்துப் பதினைந்து கதைகளையாவது படித்துப் பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது என்பதை என் அனுபவத்தில் இப்போது உணர்கிறேன். என்றால், இந்தத் தொகுப்புக்காக எத்தனை கவிதைகளையும் கதைகளையும் படித்து இருப்பார் என்பது மலைப்பூட்டுகிறது.
அவர் மொழியாக்கம் செய்திருக்கும் படைப்புகள் ஆப்பிரிக்க இன மக்களின் அகவாழ்வு, கலாசாரம், நம்பிக்கை இவற்றைச் சொல்வதோடு, இவற்றின்மீது புறச்சூழலும் அரசியலும் ஏற்படுத்தும் தாக்கத்தையும் எடுத்துரைக்கின்றன. அதே நேரத்தில் அந்தப் படைப்புகளின் மாந்தர்களின் உணர்வு நம்முடையதைப் போலவே இருக்கிறது; அவர்கள் வாழ்ந்த காலகட்டத்துக்கும் நிலத்துக்கும் நம்மைக் கடத்திச் செல்கிறது. கூடுதலாக, மொழியாக்கம் செய்யத் தேர்ந்தெடுக்கும்பொது நாம் மனதில் கொள்ள வேண்டிய வரன்முறைகளையும் சொல்லாமல் சொல்கின்றன இந்தத் தொகுதியில் இருக்கும் படைப்புகள். புகழ்பெற்ற பல கறுப்பின எழுத்தாளர்களின் படைப்புகளைக் கொண்ட அருமையான தொகுதியை வழங்கிய திரு. இந்திரன் அவர்களுக்கு எத்தனை முறை நன்றி சொன்னாலும் போதாது.
இந்தத் தொகுதியில் திரு. இந்திரனின் மொழிபெயர்ப்பில் லாங்ஸ்டன் ஹ்யூக்ஸின் கவிதையான 'நிறைவேறாத கனவு': நிறைவேறாத கனவு என்னவாகிப் போகிறது!

வெயிலில் காய்ந்து சுருங்கும்
திராட்சையைப்போல் உலர்ந்து போகிறதா?
அல்லது
ஒரு புண்ணைப்போல சீழ்பிடித்துப்
பின் மறையுமோ?
கெட்டுப் போன மாமிசத்தைப்போல
நாற்றமடிக்குமோ?
அல்லது பாகு நிறைந்த இனிப்பைப்போல்
சர்க்கரைப் பூத்துப் போகுமோ?
ஒருவேளை
கனமான ஒரு சுமைபோல
தளர்ந்து தொங்கிப் போய்விடும் போலிருக்கிறது
அல்லது
கனவு
வெடிக்குமா?